**தோட்டக்கலை துணை இயக்குநர், புதுக்கோட்டை அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை:திரு. சே. அருணாசலம், பி.எஸ்ஸி(தோ.க).**

செமுக.அ.1/1020/2019 நாள்:24 .09.2019

பொருள்: பணிக்குழு- தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்தொகுதி.IV-ல் அடங்கிய பணிகள் நேரடி தேர்வு - 2015-16, 2016-2017 மற்றும் 2017-18 ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறை மூலம் தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் - புதுக்கோட்டை தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக இளநிலை உதவியாளர்களுக்கு - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை.3, க.எண்.1012/PSD-G2/2019, நாள் 20.02.2019 மற்றும் 27.02.2019.
2. சென்னை, வேளாண்மை இயக்குநர், அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) அவர்களின் செமுக. அநிபி.5/139388/2018, நாள்: 05.03.2019.
3. சென்னை தோட்டக்கலை இயக்குநர், அவர்களின் செயல் முறை ஆணைகள் அபபி.2/4193/2019, நாள்: 07.03.2019.
4. இவ்வலுவலக கடித எண்:அ1/1020/2019, நாள்: 25.03.2019.

******

ஆணைகள்:

பார்வை (2) மற்றும் (3)-ல் காணும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்களாக பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்களின் பணியினை பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய பட்டியல் வ.எண் | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | பணியேற்ற அலுவலகம் | அரசுப்பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | 5 | அ.சந்திரன், இளநிலை உதவியாளர் | தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம், புதுக்கோட்டை. | 13.03.2019 மு.ப | 13.03.2019 மு.ப |
| 2. | 32 | இர.சொர்ணமகேஸ்வரன், இளநிலை உதவியாளர் | | 13.03.2019 மு.ப | 13.03.2019 மு.ப |
| 3. | 115 | வே. உலகநாதன், இளநிலை உதவியாளர் | | 13.03.2019 மு.ப | 13.03.2019 மு.ப |
| 4. | 286 | ம.கதிரேசன், இளநிலை உதவியாளர் | | 18.03.2019 மு.ப | 18.03.2019 மு.ப |

த.பி.பா.

2. இப்பணிவரன்முறை சென்னை உயர் நீதிமன்றம், சென்னை / மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது. ("This Regularization is subject to the outcome of the W.P's Pending in the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the Post included in Combined Civil Services Examination Group – IV for the year 2015-16,2016-17 and 2017-18 recruitment").

3. மேற்காணும் பணியாளர்கள் இளநிலை உதவியாளர்கள் (பிணையமற்றது) பதவியில் 2-ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை 3-ஆண்டு தொடர் பணிக்காலத்துக்குள் முடிக்க வேண்டும். 2-ஆண்டு பணிகாலத்திற்குள் இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்து இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிட்ட பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர்காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்,
புதுக்கோட்டை.

24.09.19

பெறுநர்:

1. அ.சந்திரன், இளநிலை உதவியாளர்.
2. இர.சொர்ணமகேஸ்வரன், இளநிலை உதவியாளர்.
3. வே. உலகநாதன், இளநிலை உதவியாளர்.
4. ம.கதிரேசன், இளநிலை உதவியாளர்.

நகல்: அ.2 பிரிவு இவ்வலுவலகம்
நகல்:பணிப்பதிவேட்டிற்கு
நகல்:அ1-இருப்புக் கோப்பிற்கு.